<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No.35/2026</u>

**<u>நாள் : 27.04.2026</u>**

**எ.ம.சா.** 1 (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மருதாச்சலம் | மாவட்டம் | : | சேலம் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.கோவிந்தராஜ் | வயது | : | 32 |
| ஊர் | : | மேட்டூர் | தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வட்டம் | : | மேட்டூர் | தேசியம் | : | இந்தியன் |

1) நான் திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்று 24.04.2026 தேதியிட்ட அதிகாரமளிப்பு கடிதத்தின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். அதிகாரமளிப்பு கடிதம் **எ.ம.சா.ஆ.1.**, மேற்படி அழைப்பாணையில் பணிக்கப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

மேற்படி அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட TN 29 BU 1220 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன **ஆய்வறிக்கை உண்மை நகல் எ.ம.சா.ஆ.2.** மேற்படி அழைப்பாணையில் டிவிஎஸ் 50 என்ற வாகனத்தை ஓட்டிச் சென்ற பொன்னுசாமி, த/பெ.துரைசாமி, 1/157, பெரியகண்ணாலப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், திருப்பத்தூர் என்ற நபருக்கு ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது. இதுசம்பந்தமாக ஆவணங்களை தேடிப்பார்த்ததில் செல்வம் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இதுநாள் வரை வழங்கப்பட்டதாக

தெரியரவில்லை. மேற்படி வாகனத்தை ஆய்வு செய்தபோது காப்பீட்டு சான்றினை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. நான் TN 29 BU 1220 என்ற வாகனத்தின் தகுதிச்சான்றானது அழைப்பாணையில் கோராததால் அதனை நான் கொண்டுவரவில்லை.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

எனது அலுவலகத்தில் உள்ள 2012 முதல் 2018 வரையிலான ஆவணக்கோப்புகளை தேடிப்பார்த்ததின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். 2012க்கு முந்தைய கால கட்டத்தில் வாணியம்பாடி வட்டார போக்குவரத்து அலுவலகம் மட்டுமே செயல்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி பொன்னுசாமி, வாணியம்பாடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளரா என்பது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் வேறு ஒரு முகவரியில் திருப்பத்தூரை தவிர இதர வட்டார போக்குவரத்து அலவலகத்திலும் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் ஆவணங்களை முறைப்படி பரிசீலிக்காமல் செல்வம் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.